**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**28**
**Defence**
**Court**

**Name : வெங்கடேசன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **11.01.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசி கௌசிங்போர்டில் குடியிருக்கிறேன். நான் தென்காசி திருநெல்வேலி சாலையில் தங்கப்பாண்டியன் மருத்துவமனைக்கு எதிர்புறம் கூல்டிரிங்ஸ்கடை நடத்தினேன். என் கடைக்கு பக்கத்தில் கேபிள் டிவி அலுவகம் இருந்தது. அந்த அலுவகத்தினை ரவி என்பவர் சுமாராக எத்தனை மாதங்களுக்கு முன்னர் அங்கு கடைநடத்தினார்கள் என்று ஞாபகம்

இல்லை. காளியப்பன் டீக்கடை தெரியும். அப்துல்சமூது நடத்திய கடை என்னவென்று ஞாபகம் இல்லை. லெட்சுமி நிவாஸ் ே ஹாட்டல் மேற்கே உள்ளது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இரவு 8.30 வரை கடை நடத்துவேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**</u>:-

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என்னை 2007 ம் வருடம் அக்டோபர் மாதம் போலீசார் விசாரித்தனர் என்றும் அப்போது நான் கூல்டிரிங்ஸ்கடை நடத்துவதாகவும் என் கடைக்கு மேற்கே உள்ள அப்துல்சமூது என்பவரின் செல்போன் கடைக்கும் காளையப்பன் கடைக்கும் இடையே இந்து முன்னணி அமைப்பை சேர்ந்த ரவி என்பவர் ராஜ் என்ற பெயரில் கேபிள் டிவி நடத்தியதாகவும் அவர் அலுவலகத்தில் இந்து முன்னணி அலுவலகம் செயல்பட்டதாகவும் சுமார் 21/2 மாதங்களுக்கு முன்னர் வாடகைக்கு எடுத்து அவர் பொறுப்பில் வைத்திருந்தார் என்று கூறினேன் என்றால் சரியல்ல. ஆனால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார் என்றும் தற்போது வழககிற்காக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 14.08.2007 ம் தேதி கூலக்கடை பஜாரில் 6 நபர்கள் இறந்தார்கள் என்றும் அதை கேள்விப்பட்டேன். ராஜ் கேபிள் டிவி அலுவலகத்தில் சம்பவத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் சொர்ணத்தேவரின் மக்கள் மற்றும் அவரது உறவினர் அங்கு வந்துசென்றனர் என்றும் அவர்கள் பெயர் சக்தி, செந்தில், சுரேஷ், சேகர், சுரேந்திரன், சுப்பிரமணி, கபிலன் என்று எனக்கு தெரிந்தவர்கள் என்றும் 14.08.2007 சம்பவம் நடைபெற்றது பற்றி தான் கேள்விப்பட்டேன். சம்பவத்திற்கு

3/4 மணி நேரத்திற்கு முன்பாக சக்தி ஒரு காரில் சுப்பிரமணி, செந்தில், சுரேந்திரன், கபிலன் ஆகியோர்களை ஏற்றிக்கொண்டு கேபிள்டிவி அலுவகத்தில் இருந்து வடக்குநோக்கி சென்றார்கள் என்றும் அதன் பின்னர் சொர்ணத்தேவர் மகன்கள் மூன்றுநபர்களும், 3 முஸ்லீம்களும் இறந்துபோனதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளில் பலரும் எனது வாடிக்கையாளர்கள் என்றும் அவர்களில் சிலர் என் உறவினர் என்றும் அதனால் அவர்களை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**